DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

Calender
Miscellaneous **C.C.NO. 131/2017**

Deposition of witness for Prosecution அ.சா. 7

Defence

Court

Name : ராஜ்குமார்
Father/ Husband Name : ராமச்சந்திரன்
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :

Age :

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 13.10.2022.

**<u>முதல்விசாரணை:-</u>** சத்தியமாக சொல்கிறேன். நான் தற்போது ஏ. வல்லாலம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 25.10.2016-ம் தேதி இரவு 01.30 மணியளவில் நான் சிவகங்கை மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் பணியில் இருந்துபோது ரவிச்சந்திரன் என்பவர் திருவேகம்பத்தூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் இருந்து மேல் சிகிச்சைக்காக வந்தார். அவரை பரிசோதனைசெய்தபோது அவர் தன்னை அடையாளம் தெரிந்த ஒரு நபர் தலையில் அடித்ததாக சொன்னார். அதனால் தலையில் வெட்டுக்காயம் ஏற்பட்டதாகவும் திருவேகம்பத்தூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் அதற்கு தையல் போட்டு சிகிச்சை எடுத்துக்கொண்டதாக தெரிந்து கொண்டேன்.

2. மேலும் அவருக்கு வாந்தி, மயக்கம் வந்ததாகவும் எங்களிடம் சி.டி. ஸ்கேன் வசதி இல்லாததாலும் 108 ஆம்புலன்ஸ்டன் மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். அங்கு அவர் எடுத்துக்கொண்ட சிகிச்சை அடிப்படையிலான ஆவணங்களை வைத்து அ.சா.1 ரவிச்சந்திரனுக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என சான்று வழங்கினேன்.

**(விபத்துப்பதிவேடு மற்றும் அதன் பின்புறம் காயத்தின்தன்மை குறித்து கருத்துரை அடங்கிய சான்று அ.சா.ஆ.3)** போலீஸ் என்னை விசாரிக்கவில்லை.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

இருசக்கரவாகனத்தில் வேகமாக சென்று கீழே விழுந்தால் நான் சொல்லியுள்ள காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்பு இல்லை. வீட்டின் உள்ளே செல்லும்போது கவனக்குறைவாக நிலையில் முட்டினால் நான் விபத்துப்பதிவேட்டில் குறிப்பிட்டுள்ள காயங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்றால் வாய்ப்பு உள்ளது.

மறு விசாரணை: இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்/-)ஆர்.எம்.மாரிமுத்து,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை